# வருடாந்த செயற்றிறன் அறிக்கை மற்றும் கணக்குகள் 2018

சுற்றுலா அபிவிருத்தி வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு

இவ்வறிக்கை 12 ஆம் திகதி செப்தெம்பர் மாதம் 2002 ஆண்டு பொது நிதிகள் திணைக்களம் வெளியிட்ட 402 ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டது

**பொருளடக்கம்** பக்கம்


| | | |
|---|---|---|
| | நோக்கு, குறிக்கோள் | i |
| | அமைச்சின் தொழிற்பாடுகள் | ii |
| **அத்தியாயம் 1 – அமைச்சு பற்றிய பொதுவான கண்ணோட்டம்** | | |
| 1.1 | அறிமுகம் | 1 |
| 1.2 | அமைச்சில் உள்ள பிரிவுகள் | 4-17 |
| **அத்தியாயம் 2 – அபிவிருத்திக் கருத்திட்டங்கள்** | | |
| 2.5 | அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | 18 |
| 2.5.1 | சுற்றுலாவுக்கான கவர்ச்சி மிக்க இடங்களை மேம்படுத்தல் | 20-27 |
| 2.5.2 | சமூக சுற்றுலாத்துறை கிராமங்களை அபிவிருத்தி செய்தல் | 27 |
| 2.5.3 | சுற்றுலாத்துறை மனித வளங்களை அபிவிருத்தி செய்தல் | 28-30 |
| 2.5.4 | சிறப்பு வாய்ந்த சுற்றுலா இடங்களில் உள்ள புகையிரத நிலையங்களைத் தரமுயர்த்துதல் | 31 |
| 2.5.5 | ஆறு கோட்டைகளை அபிவிருத்தி செய்தல் | 32 |
| 2.5.6 | சுற்றுலா நேயம் கொண்ட “டுக் டுக்” நிகழ்ச்சித்திட்டம் | 34 |
| 2.5.7 | உயர் சுற்றலா கவர்ச்சியுடைய பிரதேசங்களில் சுற்றுலாப் பொலிஸ் அலகுகளைத் தாபித்தல் | 34 |
| 2.5.8 | மன்னார், மடு மாதாக் கோவில் பிரதேசத்தில் தற்காலிக தங்குமிடத்தினை நிர்மாணித்தல் | 35 |
| 2.5.9 | சந்தை அபிவிருத்தி வசதியளிப்பு | 35-36 |
| 2.6 | வனசீவராசிகள் பிரிவின் கீழ் செயற்படும் கருத்திட்டங்கள் | 37-38 |
| **அத்தியாயம் 3 – நிதி பிரிவு** | | |
| 3.1 | நிதி செயற்பாடு -2018 | 39-45 |
| **அத்தியாயம் 4 – உள்ளக் கணக்காய்வுப் பிரிவு** | | |
| 4.1 | அறிமுகம் உள்ளக் கணக்காய்வு முன்னேற்றம் | 46-48 |

**அட்டவணை**


| அட்ட இல | | புக்கம் இல |
|---|---|---|
| 2.1 | சுற்றுலாத்துறையின் செயற்றிறன் 2013 – 2018 | 18 |
| 2.2 | பிரசித்தி மிக்க முதல் 10 சந்தை மூலங்கள் (நாடுகள்) | 19 |
| 2.3 | அபிவிருத்திக் கருத்திட்டங்கள் - 2018 | 20 |
| 2.4 | சுற்றலாக் கவர்ச்சிக் கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்தல் | 22 |
| 2.5 | மூன்று மாத கால விருந்தோம்பல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் பற்றிய சுருக்கத் தகவல் | 29 |
| 2.6 | சுற்றுலாச் சேவை வழங்குனர்களுக்கான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (3 நாட்கள்) - 2018 | 31 |
| 2.7 | கருத்திட்டங்கள் பற்றிய சுருக்கத் தகவல்கள் | 32 |
| 3.1 | பொருத்தப்பாடு சட்டத்தின் கீழ் பயன்பாட்டுத் மொத்த ஒதுக்கீடுகள் – 2018 | 40 |
| 3.2 | **மொத்த வழங்குதல்** | 41 |
| 3.3 | **மொத்த வழங்குதல் திட்டங்கள்** | 41 |
| 3.4 | **மொத்த வழங்குதல் மீது பயன்பாடு** | 41 |
| 3.5 | சொத்துக்கள் முகாமைத்துவம் | 42 |
| 3.6 | அரச சேவையாளர்களின் "பி" முற்பணக்கணக்கு | 42 |
| 3.7 | கடன் மற்றும் முற்பணம் | 42 |
| 3.8 | நிதியியயல் மேம்பாட்டு சாராம்சம்- 2018.12.31 | 43 |
| 3.9 | கருத்திட்டத்துக்கு அமைய நிதியியல் மேம்பாடு -2018 | 43 |
| 3.10 | சொத்துக்கள் முகாமைத்துவம் | 45 |
| 3.11 | அரச ஊழியர்களின் முற்பண பீ கணக்கு | 46 |
| 3.12 | கடன் மற்றும் முற்பண கணக்குகளின் சாராம்சம் -2018.12.31 | 46 |
| | **வரைபு** | |
| 1.2 | வீசாக்கள் பற்றிய விபரம் | 5 |
| 2.1 | அந்நியச் செலாவணி ஈட்டுகையாளர் என்ற வகையில் சுற்றுலா வருமான வளர்ச்சி | 19 |

## நோக்கு (சுற்றுலா அபிவிருத்தி)

மறக்கமுடியாத, உண்மையான, பல்லினத்துவம் வாய்ந்த சுற்றுலா அனுபவங்களுக்கான உலகத்தில் மிகச்சிறந்த தீவாக மதிக்கப்படுதல்

## குறிக்கோள் (சுற்றுலா அபிவிருத்தி)

சமூக ரீதியில் பிரத்தியேகமானதும் சுற்றாடல் ரீதியில் பொறுப்பு வாய்ந்ததுமான இலங்கையின் இயற்கை மற்றும் கலாசார மரபுரிமைகளைப் பிரதிபலிக்கும் அதே வேளையில் நிலைபேறாக தாவரங்கள் மற்றும் விலங்குகளை பாதுகாகத்தலுடன் அதிவிசேடமான சுற்றுலா அனுபவங்களையும் அதேநேரம் நாட்டிற்கும் மக்களுக்கும் பொருளாதார நன்மைகளையும் பெற்றுக் கொடுக்கின்ற மிக உயர் பெறுமானமுடைய ஒரு சுற்றுலா தலமாக இலங்கையை விளங்கச்செய்தல்.

## நோக்கு (கிறிஸ்தவ சமய அலுவல்கள்)

கிறிஸ்தவ மக்களின் நலனுக்காக பணியாற்றுதல்

## குறிக்கோள் (கிறிஸ்தவ சமய அலுவல்கள்)

கிறிஸ்தவ சமயம் மற்றும் கலாசாரம் என்பவற்றின் விழுமியங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை சமூகம் ஏற்றுக்கொள்ளும் வகையில் விருத்திச்செய்தல்.

## சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் (இல 2103/33 வெள்ளிக்கிழமை டிசம்பர் 28, 2018)

கடமைகளும் பணிகளும்

1. சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் தொடர்பான விடயங்களுடனும் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதல்
2. சுற்றுலாத்துறை கைத்தொழில் பற்றிய தேசிய கொள்கைகளுக்கமைவாக சுற்றுலாத்துறை கைத்தொழில் அபி விருத்தியும் நியமங்களை வகுத்தமைத்தல்
3. சுற்றுலாத்துறை முகவராண்மைகளின் பதிவும் ஒழுங்குறுத்துகை
4. ஓய்வுநேரங்களைக் கழிப்பதற்காக பொழுதுபோக்கு வசதிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேம்படுத்துதல்
5. இலங்கையின் மரச்செடிகளைப் பேணுதலும் தாவரப் பூங்காக்களைப் பராமரித்தலும் மலர்ச்செய்கைத் தொழிலை மேம்படுத்தல்
6. மிருகங்கள், பறவைகள் மற்றும் ஊர்வன ஆகிய பல்வேறு விலங்கு களை ஒன்றுசேர்த்தலும் காட்சிப் படுத்தலும் என்பவற்றுடன் சம்பந்தப் பட்ட அலுவல்கள்
7. வனசீவராசிகள் வளங்களைப் பேணுதல்
8. வனசீவராசிகளின் பாதுகாப்பு பிரதேசங்களில் சுற்றுலாக் கைத் தொழிலை ஊக்குவிக்கும்போது சுற்றாடல் முறைமை பாதுகாக்கப் படுவதை உறுதிப்படுத்தத் தேவை யான நடவடிக்கை எடுத்தல்
9. அழிந்துபோகும் அச்சுறுத்தலை எதிர் நோக்கும் விலங்கு வகுதிகளின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான சமவாயம் மற்றும் அதற்குரிய அலுவல்கள்
10. ஒழுக்கப் பண்பாட்டு ரீதியான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக மக்களிடையே சமய ரீதியிலான விழுமியங்களை விருத்தி செய்வதன் பொருட்டு கொள்கைகளையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத் தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தல்
11. கிறிஸ்தவ மத அலுவல்கள் தொடர் பிலான நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்படுத்துகையும் தொடராய்வு செய்தல்
12. நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள்
13. நிறுவனங்களைக் கண்காணித்தல்

**அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்கள்**

1. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
2. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்
3. இலங்கை மாநாட்டுப் பணியகம்
4. இலங்கை சுற்றுலா மற்றும் விடுதி முகாமைத்துவ நிறுவனம்
5. தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களம்
6. தேசிய தாவரப் பூங்கா திணைக்களம்
7. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
8. வனசீவராசிகள் நம்பிக்கைப் பொறுப்பு
9. கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம்

# அத்தியாயம் 1

## அமைச்சு பற்றிய பொதுவான கண்ணோட்டம்

# 1. அமைச்சு பற்றிய பொதுவான கண்ணோட்டம்

### 1.1.அறிமுகம்

சுற்றுலாத்துறை அபிவிருத்தி ,வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சானது 2103/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2018 மார்கழி 28 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. சுற்றுலாத்துறை தொடர்பிலான பொறுப்புக்களைக் கொண்டு தாபிக்கப்பட்ட இவ் அமைச்சின் பிரதான இலக்குகளுள், பொருத்தமான கொள்கை மற்றும் ஒழுங்குறுத்துகை வேலைச்சட்டகம் ஆகியவற்றை வகுத்தல் மற்றும் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளையும் சுற்றுலாவுக்கான இலக்கு நாடாக இலங்கை ஊக்குவிக்கப்படுவதையும் உறுதிப்படுத்தல், மற்றும் அமைச்சின் கீழ் செயற்படும் நோக்கில் வர்த்தமானி மூலம் வெளிப்படுத்தப்பட்ட நிறுவனங்களின் நிர்வாகம் மற்றும் நிதிசார் மேற்பார்வை ஆகியற்றைப் பேணுதல் போன்றனவும் உள்ளடங்குகினற்ன.

இவ் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் பின்வரும் திணைக்களங்களும் நியதிச்சட்ட முகவர் நிறுவனங்களும் இயங்கி வருகின்றன:

- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
- இலங்கை சுற்றுலா மற்றும் விடுதி முகாமைத்துவ நிறுவனம்
- இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்
- இலங்கை மாநாட்டுப் பணியகம்
- தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களம்
- தேசிய தாவரப் பூங்கா திணைக்களம்
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
- வனசீவராசிகள் நம்பிக்கைப் பொறுப்பு
- கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம்

அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரின் எண்ணிக்கை 79 ஆகக் காணப்படுகின்ற அதேவேளை, 2018.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு அமைச்சின் தற்போதைய ஆளணியினரின் எண்ணிக்கை 71 ஆகக் காணப்படுகிறது(சுற்றுலா பிரிவு). இதற்கிணங்க உதவி மற்றும் தொழிற்பாட்டுத் தரங்களில் 8 வெற்றிடங்கள் தற்போது காணப்படுவதோடு, அவை பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் நிரப்பப்படவேண்டியவையாகும்.

**அங்கீகரிக்கப்பட்ட ஆளணி (சுற்றுலா பிரிவு)**

| No | ஊழியர் நிலை | அங்கரிக்கப்பட்ட | பணிபுரிந்துவரும் | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| **1** | சிரேஷ்ட நிலை | 16 | 15 | 01 |
| **2** | இரண்டாம் நிலை | 04 | 03 | 01 |
| **3** | மூன்றாம் நிலை | 37 | 31 | 06 |
| **4** | ஆரம்ப நிலை | 22 | 22 | - |
| | மொத்தம் | **79** | **71** | **08** |

1.2 சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு

அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு. (சுற்றுலா பிரிவு)






விரிவாக்கம்: அ.உ.- அபிவிருத்தி உதவியாளர் / அபிவிருத்தி உத்தியோகத்தர், மு.உ.- முகாமைத்துவ உதவி ட.- அலுவலக உதவியாளர், த.தொ.தொ.உ.-தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப உதவியாளர், ஒ.ப.க- ஒளிப்படக் கலைஞர், ஒ.உ.-ஒளிப்பட உதவியாளர், நி.உ.-நிதி உதவியாளர், சி/ஆ-சிங்களம் /ஆங்கிலம், த/ஆ: தமிழ் / ஆங்கிலம்.

அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு ( [illegible] பிரிவு)



## 1.3. அமைச்சின் பிரிவுகள்

அமைச்சானது பிரதானமாக இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவையாவன, சுற்றுலா மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் பிரிவு மற்றும் வனஜீவராசிகள் பிரிவு ஆகியனவாகும்.

### 1.3.1. சுற்றுலா மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் பிரிவு

அமைச்சானது பிரதானமாக நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவையாவன, நிர்வாகம் மற்றும் மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு, அபிவிருத்திப் பிரிவு, திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு மேலும் நிதிப் பிரிவு ஆகியனவாகும்.

#### 1.3.1.1. நிர்வாக பிரிவு

நிர்வாக பிரிவானது மேலதிக செயலாளர் நிர்வாகததின் கீழ் இயங்கி வருகின்றது.

**நிர்வாகம் மற்றும் மனித வளங்கள் பிரிவு**

இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு:

- பணியாளர்களை ஆட்சேர்த்தல், பணிக்கமர்த்துதல், பதவியுயர்த்தல் மற்றும் பதவி ஓய்வு.
- பணியாளர்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு ஆகியவற்றை மேம்படுத்தல்.
- பணியாளர்களின் செயலாற்றுகைகளை மதிப்பிடுதல் மற்றும் அவர்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குதல்.
- பணியாளர்கள் தொடர்பான தரவுத்தளத்தினை பேணுதல்.
- ஒழுக்காற்று முகாமைத்துவம்
- ஊழியர் மனக்குறை பற்றிய முகாமைத்துவம்
- அரச நிறுவனங்களுடனான தொடர்பாடல் முகாமைத்துவம்
- துணைச் சேவைகள் மற்றும் பொருட்கொள்வனவு முகாமைத்துவம்
- விளைவுத்திறன் மேம்பாடு
- அமைச்சரவை விஞ்ஞாபனம் கையளித்தல்

## இப்பிரிவின் செயலாற்றுகை

**i. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

மீளாய்வின் கீழான ஆண்டுக்காலத்தின் போது, பணியாளர்களின் திறன், அறிவு மற்றும் ஆற்றல்களை வலுவூட்டும் நோக்கிலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியிலான பயிற்சியளிப்புகளுக்கான நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டது. சமனநல சமுர்த்தி பயிற்சியளிப்பின் போது, 60 பணியாளர்களுக்கு தமது பணிகள் தொடர்பிலான ஒழுக்காற்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. மீளாய்வுக்கான ஆண்டின் போது, 29 பணியாளர்கள் வெளிநாட்டு ரீதியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியவற்றில் கலந்துகொண்டனர்.

 

சமநலவெல - வெளிகளபயிற்சி



சமநலவெல வெளிகளபயிற்சி பெற்ற குழுவினர்

உள்நாட்டுப் பயிற்சியளிப்பின் போது, 20 பணியாளர்களுக்கு தமது பணிகள் தொடர்பிலான ஒழுக்காற்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது.

**அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்**

அமைச்சரவைக்கான 30 விஞ்ஞாபனங்கள் மீளாய்வுக்கான ஆண்டுக்காலத்தின் போது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டன. இந்த விஞ்ஞாபனங்கள் உள்ளடக்கிய விடயங்கள் மற்றும் அவை தொடர்பில் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், CITES CoP18 கருத்தரங்கு

**கிறிஸ்தவ சமய அலுவல்கள் பிரிவு**

மீளாய்வுக்கான ஆண்டுக்காலத்தில், சமய அனுஸ்டானங்களின் நிமித்தம் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திடம் வீசாவுக்காக விண்ணப்பித்த விண்ணப்பங்கள் தொடர்பில் அமைச்சினால் செயன்முறைப்படுத்தப்பட்டு சிபாரிசு செய்யப்பட்ட வீசாக்கள் பற்றிய விபரம்

வரைவு- 1.2




மூலம்: சுற்றுலாத்துறை அபிவிருத்தி ,வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள்

### 1.3.1.2. நிதி மற்றும் கணக்கீட்டுப் பிரிவு

இந்தப் பிரிவானது அமைச்சின் நிதிசார்ந்த வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கான பொறுப்பினைக் கொண்டதாகும். நிதிப் பிரிவானது நிதி சார்ந்த செயற்பாடுகள், சொத்துக்கள் முகாமைத்துவம், நிதிசார் அறிக்கையிடல்கள் மற்றும் தொழில்வாண்மைச் சேவைகள் ஆகியன உள்ளிட்ட அனேக உதவிச் சேவைகளை வழங்குகிறது. இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு,

- வருடாந்த வரவுசெலவுத் திட்ட வரைவு மதிப்பீட்டினை தயாரித்தல்.
- ஒதுக்கீட்டுக்கணக்குகளை தயாரித்தல்.
- வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகள் தொடர்பில் தொடர்ச்சியான கண்காணிப்புச் செலுத்தல்
- அரச ஊழியர்களது 'பீ' கணக்குகளை தயாரித்தல்.
- நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்.
- நிதிசார்ந்த அனைத்துச் செயற்பாடுகளையும் கையாளுதல்.
- சொத்து முகாமைத்துவம்

### 1.3.1.3.உள்ளக் கணக்காய்வுப் பிரிவு

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் உள்ளக கணக்காய்வு மற்றும் புலனாய்வுப் பிரிவானது 2016 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் செயற்படத் தொடங்கியதுடன் அமைச்சுச் செயலாளரின் நேரடிக் பொறுப்பில் குசு 134(1) பிரகாரம் இயங்குகிறது.

### 1.3.1.4 அபிவிருத்திப் பிரிவு

**அபிவிருத்திப் பிரிவு**

அபிவிருத்தி பிரிவானது மேலதிக செயலாளர் அபிவிருத்தியின் கீழ் இயங்கி வருகின்றது. இந்தப் பிரிவானது இத்துறையில் தொடர்புடைய முகவர்கள் மற்றும் பங்குதாரர்களை ஒருங்கிணைப்பதன் ஊடாக அமைச்சின் வருடாந்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாக உள்ளது. இப்பிரிவானது அரசாங்க அரச சார்பற்ற முகவர்களை ஒருங்கிணைத்து உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு முறையான சேவைகள் கிடைப்பதை உறுதி செய்து சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு உதவுகிறது. சுற்றுலா அபிவிருத்தி இலக்கு, சுற்றுலாத்துறையில் நேரடி மறைமுக வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல், நாட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி ஊக்குவிப்பை உறுதிசெய்தல். இந்த பிரிவின் செயற்பாடுகள் இருஉப அலகுகளின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது.

இப்பிரிவின் தொழிற்பாடுகள் பின்வருமாறு:

- அமைச்சின் தொலைநோக்கு, பணிநோக்கு மற்றும் குறிக்கோள்கள் ஆகியவற்றை அடைந்துகொள்வதை நோக்காகக் கொண்டு அனைத்து அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் கையாளுதல்.
- அனைத்து சுற்றுலா அபிவிருத்திக் கருத்திட்டங்களையும் அமுல்படுத்தல் மற்றும் அக்கருத்திட்டங்களை அமுல்படுத்தும் வேளையில் எழக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான அறிவுரைகளை வழங்குதல்.
- சுற்றுலா அபிவிருத்தியில் சர்வதேச ரீதியிலான ஒத்துழைப்பினை வழங்கல்.
- சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகாளுக்கான புதிய வியூகங்களைவகுத்தல்
- ஈ-அரசாங்கக் கொள்கையினை அமுல்படுத்தல்.

**திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு**

இது அமைச்சின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு சார்ந்த செயற்பாடுகளுக்குப் பொறுப்பான பிரிவாகும். திட்டமிடல் பிரிவானது சுற்றுலாத்துறையுடன் சம்பந்தப்பட்ட சீரமைக்கப்பட்ட தேசிய அபிவிருத்திக் கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரிப்பதில் ஒத்துழைப்பினையும் வசதிகளையும் வழங்குவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. இந்த இலக்கினை அடையும் நோக்கில், இப்பிரிவானது அரசாங்கத்தின் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் ஒருங்கிணைத்து அவற்றுக்கு வசதியளிப்பதற்கான பாரிய வகிபாகத்தினை வகிப்பதோடு, தேசிய திட்டமில் திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் ஆகியவற்றுடனும் ஒருங்கிணைந்து செயற்பட்டு வருகிறது.

இதற்கிணங்க இப்பிரிவின் தொழிற்பாடுகள் பின்வருமாறு:

- அமைச்சின் செயற்திட்டங்கள் ஒவ்வொரு ஆண்டுக்குமான திறைசேரி ஏற்பாட்டிற்கு ஏற்ப வகுக்கப்படுவதோடு, அக்குறித்த செயற்திட்ட இலக்குகள் அமைச்சின் கீழான நிறுவனங்களுக்கு அவற்றுக்குப் பொருத்தமான பணியிலக்குகளைக் கொண்டு பகிர்ந்தளிக்கப்படுகின்றன.
- மாதாந்த/ காலாண்டுக்கான முன்னேற்ற அறிக்கைகளைப் பெறுதல் மற்றும் செயற்திட்டத்திற்கு இணங்க அத்தகைய அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள்

குறித்தான காலாண்டு அடிப்படையிலான மீளாய்வினைப் பெறுதல். மேலும், முன்னேற்றம் பற்றிய மீளாய்வானது வருடாந்த செயற்திட்டம் குறித்தான காலாண்டுக்குரிய நிதி மற்றும் பௌதீக இலக்குகளுக்கு ஏற்ப நிறுவன மட்டத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

- விளைவு நோக்கிய மதிப்பீட்டுச் செயன்முறையினை கையாளுதல் மற்றும் அமைச்சின் ஒட்டுமொத்த வருடாந்த முன்னேற்ற அறிக்கையினைத் தயாரித்தல்.
- அமைச்சின் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தையும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினையும் தயாரித்து சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புகளுக்குச் சமர்ப்பித்தல்.
- திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அவற்றின் நோக்கெல்லையின் கீழான புதிய கருத்திட்டப் பிரேரணைகள் தொடர்பில் மதிப்பீடு செய்து, அவற்றை தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கும் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கும் சமர்ப்பித்தல்.

## 1.3.2. வனசீவராசிகள் பிரிவு

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சாக விளங்கிய அமைச்சு இல. 2070/56 ஐக்கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் மூலம் 2018 மே மாதம் 12 ஆந் திகதி வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சாக தாபிக்கப்பட்டதுடன், 2096/17 ஐக் கொண்ட அதி விசேட வர்த்தமானியின் மூலம் 2018 நவம்பர் 05 ஆந் திகதி சுற்றுலா மற்றும் வனசீவராசிகள் அமைச்சாக தாபிக்கப்பட்டது. மீண்டும் இல. 2103/33 ஐக் கொண்ட அதி விசேட 2018 டிசெம்பர் 28 ஆந் திகதி சுற்றுலா அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சாக தாபிக்கப்பட்டது.

- தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களம்
- தேசிய தாவரப் பூங்கா திணைக்களம்
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
- வனசீவராசிகள் நம்பிக்கைப் பொறுப்பு

**அமைச்சின் வனசீவராசிகள் பிரிவின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்**

வனசீவராசிகள் பிரிவின் மூலம் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் மற்றும் தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களம் ஆகிய மூன்று திணைக்களங்களினதும் வனசீவராசிகள்பொறுப்பு நிதியத்திற்குமுரிய கொள்கைகளைத் தயாரித்தல்அபிவிருத்திப் பணிகளுக்கு உரிய வழிகாட்டல்களை அவற்றின் முன்னேற்றத்தை பரிசீலித்தல் மற்றும் மதிப்பாய்வுக்குட்படு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து கண்காணிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது. அவ்வாறே வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புக் சட்டங்கள், தாவரவியற் பூங்காக்கள் கட்டளைச் சட்டங்கள் மற்றும் மிருகக்காட்சிசாலைகள் சட்டங்கள் ஆகியவற்றைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

**2018.12.31 ஆம் திகதியின்போது பணியாட்றொகுதி பற்றிய விபரங்கள் (வனசீவராசிகள்)**

| ஊழியர் நிலை | அங்கரிக்கப்பட்ட | பணிபுரிந்துவரும் |
|---|---|---|
| சிஷேட்ட நிலை | 20 | 16 |
| இரண்டாம் நிலை | 03 | 02 |
| மூன்றாம் நிலை | 53 | 44 |
| ஆரம்ப நிலை | 32 | 19 |
| **மொத்தம்** | 108 | 81 |

மூலம்: : வனசீவராசிகள் பிரிவு- நிருவாகப் பிரிவு

### 1.3.2.1. வனசீவராசிகள் பிரிவின் கீழ் உள்ள பிரிவுகள்

#### 1.3.2.1.1. நிருவாகப் பிரிவு

**பணிப்பொறுப்புகள்:-**

- அமைச்சினுள் பொதுவான நிருவாகம் மற்றும் ஒழுக்கத்தினை நடைமுறைப்படுத்தல்
- அமைச்சைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் சகலரினதும் தாபன அலுவல்களை மேற்கொள்ளல்
- திணைக்களத்தின் அலுவல்களை முறையாக மேற்கொள்வதற்காக தேவையான உதவிகளை அமைச்சினால் வழங்கல்
- பாராளுமன்ற ஆலோசனைக் குழு, பாராளுமன்ற வினாக்கள் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுடன் தொடர்புடைய அலுவல்களை நிறைவேற்றுதல்.
- அமைச்சின் மனிதவள மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**2018.12.31 ஆம் திகதியின் போது மேம்பாடு**

- 2018 ஆம் ஆண்டில் வனசீவராசிகள திணைக்களத்துடன் தொடர்புடைய 10 ஆரம்ப விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 06 ஒழுக்காற்று விசாரணைகள் பற்றிய முறையான அறிக்கைகள், அரச சேவைகள் ஆணைக்குழு, பொது நிர்வாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

- இந்த அமைச்சில் பணிபுரிந்துவரும் உத்தியோகத்தர்கள் சகலருக்கும் 03/2016 இலக்க சுற்றுநிருபத்துக்கு அமைய சம்பள அளவுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளதுடன் தகுதிபெற்ற 60 உத்தியோகத்தர்களுக்கு படி ஏற்றம் வழங்கப்பட்டுள்ளது.

- 01/2018 இலக்க வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் சுற்றுநிருபத்துக்கு அமைய 05 வாகன அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. பொது நிருவாக சுற்றுநிருபம் 22/99 இன் கீழ் 2018 ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற இரண்டு (02)உத்தியோகத்தர்களுக்கு வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்னன.

- 2018 ஆம் ஆண்டு 10 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 06 இற்கான அமைச்சரவை தீர்மானங்கள் கிடைத்துள்ளன.

- 2018 ஆம் ஆண்டில் கடமையில் ஈடுபட்டிருந்த 85 உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக்கோவையின் XII பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய லீவு தொடர்பான ஏற்பாடுகள் முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

- இடமாற்றம் பெற்றுக்கொண்டுள்ள 27 உத்தியோகத்தர்களின் லீவு பற்றிய அறிக்கைகள் அத் திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

- புகையிரத சலுகை பயணச் சீட்டுகளை கோரியுள்ள 6 உத்தியோகத்தர்களுக்கு மூன்று மாதகால பருவச் சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

- பதவிநிலை உத்தியோகத்தர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய விபரங்கள் முறையாக பெறப்பட்டுள்ளன.

- அமைச்சைச் சேர்ந்த கௌரவ அமைச்சரின் பணியாட்றொகுதி,கௌரவ பிரதி அமைச்சரின் பணியாட்றொகுதி மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் 54 தொலைபேசி பற்றுச்சீட்டுகளுக்கான கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளன.

- பொது மக்கள் முறையீடுகளாக, சனாதிபதி செயலகத்திலிருந்து 09 கடிதங்களும், பிரதம அமைச்சரின் அலுவலகத்திலிந்து 06 கடிதங்களும் கிடைத்துள்ளதுடன் அவை தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- “சனாதிபதிக்கு கூறுங்கள்” என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முன்வைக்கப்பட்டிருந்த பொது மக்களின் முறையீடுகள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- அமைச்சின், கௌரவ அமைச்சரின் பணியாட்றொகுதி மற்றும் பிரதி அமைச்சரின் பணியாட்றொகுதிகளுக்கான பதவி நியமனங்களை வழங்கல் தொடர்பில் முறையாக செயற்பட்டுள்ளதுடன் அமைச்சின் 08 அலுவலக உதவியாளர்கள் பதவி நியமனங்கள் மற்றும் சாரதிகளுக்கான நியமனங்கள் தொடர்பில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

- தகவல் அறியும் சட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டு 19 விண்ணப்பங்கள் அமைச்சுக்கு கிடைத்துள்ளன. அவற்றுள் 06 விண்ணப்பங்களுக்கு பதிலளிக்கப்பட்டுள்ளதுடன் 02 நிராகரிக்கப்பட்டுள்ளன.

- அமைச்சுடன் தொடர்பற்ற ஏனைய விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

- அமைச்சுடன் தொடர்புடைய கட்டிட வாடகை, சுத்தம் செய்யும் சேவைக்கான கட்டணங்கள் யாவும் சரியான முறையில் செலுத்தப்பட்டுள்ளன.

- ஊழியர் சேமலாப நிதி தொடர்பான 17 விண்ணப்பங்கள் சிபாரிசுகளுடன் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
- பாராளுமன்றத்தில் வாய்மூல பதில்கள் எதிர்ப்பார்க்கப்பட்ட 08 கேள்விகளுக்கும், நிலையியற் கட்டளை 27(2) அமைய எழுப்பப்பட்ட 01 கேள்விக்கும், சபை ஒத்திவைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் எழுப்பப்பட்ட 01 கேள்விக்கும், பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட உறையின் போதான 01 கேள்விக்கும் சரியான திகதியில் பதிலளிக்கப்பட்டுள்ளது.
- நிலையான அபிவிருத்தி,சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக 12 விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றுக்கான பதில் அறிக்கைகளின் சாராம்சங்கள் குறித்த தினத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
- அரசாங்க கணக்காய்வு விசாரணைகள் 04
- பொது மனுக்குழுவினால் வினாவப்பட்ட பொது மக்களின் 03 பிரச்சினைகளுக்கு வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஊடாக பதிலளிக்கப்பட்டுள்ளது.
- ஹோமாகம வள நிலையம், வரகாபொல பொறியியல் கல்லூரி, மஹரகம இலங்கை கைத்தொழில் பயிற்சி அதிகார சபை ஆகியவற்றினால் கோரப்பட்ட சமூகமளித்த பயிலுநர் கணனி பயிற்சியாளர்கள் 13 பேருக்கு செய்முறை பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.
- வனசீவராசிகள் பிரிவிற்கான 35 வாகனங்கள் இருந்ததுடன் அவற்றுள் கௌரவ அமைச்சரின் பணியாட்றொகுதி மற்றும் பிரதம அமைச்சரின் பணியாட்றொகுதி ஆகியவற்றுக்கு சுற்றுநிருபத்துக்கு அமைய வாகனங்கள் வழங்கப்பட்டபின் எஞ்சியவை வனசீவராசிகள் பிரிவின் தேவைகளுக்கான பயன்படுத்தப்பட்டன.
- மேற்குறிப்பிட்ட வாகங்னங்களுள் 03 வாகனங்களை புத்தசாசன அமைச்சுக்கு சாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 03 வாகனங்கள் மிருகக்காட்சசிச்சாலை திணைக்களத்துக்கும், தாவரவியல் பூங்காவிற்கு 1, வனசீவராசிகள் திணைக்களத்திற்கு 01 வாகனமும் இணைக்கப்பட்டுள்ளன.
- 05 வாகனங்கள் தொடர்பில் வாகனங்கள் சம்பந்தமான நிதி பிரமானக் குறிப்பு 103 அமைய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- மேற்குறிப்பிட்ட வாகனங்கள் பற்றிய ஆகுசெலவு அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்டுள்ளதுடன் நாளாந்த பயணக் குறிப்புகளும் கணக்காய்வு விசாரணைக்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

**பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்**

| **பயிற்சி வகை** | **பாடநெறிகளின் எண்ணிக்கை** | **கலந்துகொண்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| வெளி நிறுவனங்களால் வழங்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள் - உள்நாட்டு | **22** | **35** |
| கள பயிற்சித் திட்டங்கள் | **01** | **50** |
| வெளிநாட்டு பயிற்சித் திட்டங்கள் | **14** | **14** |

மூலம்: **:** வனசீவராசிகள் பிரிவு- நிருவாகப் பிரிவு

### 1.3.2.1.2. திட்டமிடல் பிரிவு

இப் பிரிவின் ஊடாக , திணைக்களங்களின் அபிவிருத்தி அலுவல்களைத் திட்டமிடல் மற்றும் அவற்றை செயற்படுத்தவதற்குத் தேவையான உதவிகள் வழங்கப்படுகின்றன. அதற்கமைய தேசிய தேவைகள் அடையாளம் காணப்பட்டு அபிவிருத்தி அலுவல்கள் திட்டமிடப்படுவதுடன் செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல், வனசீவராசிகள் பிரிவின் கீழ் செயற்படும் திணைக்களங்களின் மேம்பாட்டினை ஆராய்தல் மற்றும் மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தல், முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்தல், வரவு செலவுத் திட்ட குழு நிலையின்போது சமர்ப்பிப்பதற்காக செயலாற்றுகை அறிக்கைகள் மற்றும் ஆண்டறிக்கைகளை தயாரித்தல், சனாதிபதி செயலகத்துக்கு, நிதி அமைச்சுக்கு, கொள்கை திட்டமிடல் அமைச்சுக்கு, இலங்கை மத்திய வங்கி மற்றும் நிரல் அமைச்சு ஆகியவற்றின் தேவைகளுக்கு அமைய தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல் ஆகிய விடயங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் பெறுபேறுகள், விளைத்திறன் மற்றும் செயற்றிறன் பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொள்ளல், மீளாய்விற்கு உட்படுத்தல், செயற்படுத்தல் மற்றும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் அப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**2018.12.31 திகதியின்போதான செயலாற்றுகை**

- 2018 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
- வனசீவராசிகள் பிரிவின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் காலாண்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 13 நடாத்தப்பட்டுள்ளன.
- 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கும் ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
- சனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, ஏனைய நிரல் அமைச்சுகள் மற்றும் பாராளுமன்ற ஆலோசனைக் குழுகவுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல்
- வனசீவராசிகள், தாவரவியல் பூங்கா மற்றும் மிருகக் காட்சிச்சாலை ஆகியவற்றின் மேம்பாடு பற்றிய பிரச்சினைகளின்போது சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து அவற்றை தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- திணைக்களத்தின் கீழ் உள்ள தேசிய தாவரவியல் பூங்காக்கள் மற்றும் மிருகக் காட்சிச் சாலைகளுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் பற்றிய விபரங்களை இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- வனசீவராசிகள் பாதுகாப்பு, தாவரவியல் பூங்காக்கள் மற்றும் மிருகக் காட்சிச்சாலை திணைக்களங்களின் 12 கருத்திட்ட கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.3.2.1.3. நிதிப் பிரிவு

வனசீவராசிகள் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்களின் நிதி நிருவாகத்துக்குத் தேவையான நேரடி ஒத்துழைப்புகளை வழங்கல் இப் பிரிவின் முக்கிய செயற்பாடாகும். அதற்கமைய வனசீவராசிகள் பிரிவின் கீழ் உள்ள நிதி நிருவாக அலுவல்களை திட்டமிடல், ஒழுங்கமைத்தல், செயற்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிருவாக அலுவல்கள் கணக்காய்வுப் பரிவினால் நிறைவேற்றப்படுகின்றது.

**2018.12.31 திகதியின்போதான முன்னேற்றம்.**

- வருடாந்த வரவுசெலவு ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் அதிகாரம் பெற்ற செலவுகள், நிதி ஒழுங்குவிதிகள், சுற்றுநிருபங்களின் ஆலோசனைகளுக்கு அமைய செற்படுவதுடன் முகாமைத்துவப்படுத்தல்.
- கணக்காய்வு தலைமை அதிபதிக்கும் திறைசேரிக்கும் தேவையான மாதாந்த, காலாண்டு, அரையாண்டு மற்றும் ஆண்டறிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.
- ஒதுக்கீட்டு கணக்குகள் உட்பட்ட இறுதிக் கணக்குகள் தயாரித்து முன்வைக்கப்பட்டுள்ளன.
- களஞ்சியசாலைகள் மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவப்படுத்தப்பட்டு நிதி அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளன.
- வருடாந்த செலவுகள் மற்றும் வருமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- வனசீவராசிகள் பிரிவிற்கான சம்பளம், பொது வைப்புகள் உட்பட்ட சகல மூலதன மற்றும் மீண்டெழும் செலுத்துகைகள் செலுத்தப்படடுள்ளன.
- வனசீவராசிகள் பிரிவு மற்றும் அதன் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் வழங்கல் குழுக்களை நியமித்தல் மற்றும் வழங்கல் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- வனசீவராசிகள் பிரிவின் சேதங்கள் மற்றும் நட்டங்கள் பற்றிய கணக்காய்வு அலுவல்கள் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் சேதங்கள் மற்றும் நட்டங்கள் பற்றிய அறிக்கைகளைத் தயாரித்தல், அறிக்கையிடல், ஒப்பிடுதல் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைத்தல்.
- அரச கணக்குகள் குழு மற்றும் அரச முயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றின் பணிகளை நிறைவேற்றல் மற்றும் வனசீவராசிகள் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்களின் கணக்குக் குழு அலுவல்களை ஒருங்கிணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- வனசீவராசிகள் பிரிவின் மாதாந்த மற்றும் வருடாந்த கணக்குகளைத் தயாரித்தல், அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் வருடாந்த கணக்குகளையும் அறிக்கைகளையும் மேற்பார்வை செய்தல்.
- அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் “பீ” கணக்கின் ஊடாக கடன் செலுத்தல், அவற்றை முறையாக அறவிடல் மற்றும் அதனுடன் தொடர்புடைய கணக்குகளை பராமரித்தல்.
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு விசாரணைகள் தொடர்பிலான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- வருடாந்த நிதி பாயச்சல், முக்கிய மிகை கட்டணம், துணை மிகைக் கட்டணம் கண்காணிப்பு மற்றும் நிருவாகம், கணக்கு வைத்தல் மற்றும் அறிக்கையிடல்
- வனசீவராசிகள் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்களின் நிதி நிருவாக அலுவல்கள் மற்றும் கணக்குகள் பற்றிய கண்காணிப்பு அலுவல்களை நிறைவேற்றல் மற்றும் அவற்றின் வரவு செலவு மற்றும் வருடாந்த கணக்கு பற்றிய அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**1.3.2.1.4. அபிவிருத்திப் பிரிவு**

வனசீவராசிகள் பாதுகாப்பு,தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளை முறையாகவும் வினைத்திறனுடையதாகவும்

செயற்படுத்துவதனை கண்காணித்தல் மற்றும் அதற்கான வசதிகளை வழங்கல் இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**2018.12.31 தினத்தின்போதான மேம்பாடு**

- தேசிய பூங்காக்களுக்குள் குளங்களை புனரமைப்பதற்காக கமநல அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்து நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதன் ஊடாக வனசீவராசிகள் திணைக்களத்தின் பூங்காக்களில் குளங்களை புனரமைக்கும் பணிகள் தொடர்பில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான சந்தர்ப்பங்களில் வனசீவராசிகள் பிரிவின் ஒத்துழைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- தேசிய மிருகக் காட்சிச்சாலை திணைக்களத்துக்குச் சொந்தமான பின்னவல புதிய மிருகக்காட்சிச்சாலை மற்றும் யானைகள் சரணாலயம் ஆகியவை தொடர்பில் சுவீகரிக்கப்படவுள்ள காணிகளை முறையாக அடையாளம் காணல் மற்றும் சுவீகரிக்க முடியாத நிலையிலுள்ள காணிகளை முடிவுசெய்தல்.
- தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களத்துக்குச் சொந்தமான பின்னவல புதிய மிருகக்காட்சிச்சாலை மற்றும் யானைகள் சரணாலயம் ஆகியவற்றை விஸ்தரிப்பதற்காக காணிகளை சுவீகரிக்கும் நடபடிமுறையின்போது புதிய 03 பிரேரணைகள் காணி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
- வனசீவராசிகள் பாதுகாப்பு, வனபூங்காக்கள் மற்றும் தாவரவியல் பூங்காக்கள் தொடர்பான பொது அலுவல்களை மேற்கொள்ளல்.
- யானைகள் மற்றும் மனிதர்களுக்கு இடையிலான மோதல்களை தீர்த்துவைத்தல் என்ற தலைப்பில் பிரேரணைகளை கோரல் தொடர்பில் கிடைத்துள்ள 40 பிரேரணைகளை சாராம்சப்படுத்தி சமர்ப்பித்தல்.
- வனசீவராசிகள் பற்றிய பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதனூடாக பிணக்குகளை தீர்த்துவைக்கும் அலுவல்களை ஆரம்பித்தல்.
- 20 வான் ஒதுக்கங்கள் தொடர்பில் விமானப் படையினால் தவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 14 இடங்கள் பற்றிய கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வனசீவராசிகள் திணைக்களத்தினால் பதிலளிக்கப்பட்டுள்ளன.
- முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த விஸ்வமடு பிரதேசத்தில் மக்கள் வாழ்க்கைக்கு யானைகளால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்ப்பதற்காக சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மின்சார வேலியை அமைப்பதற்காக வனசீவராசிகள் திணைக்களத்துக்கு 5 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் மின்சார கம்பங்களை நடுவதற்கான செலவாக ரூபா 4,748,787.60 வழங்கப்பட்டுள்ளது. ஏனைய நிறுவனங்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ள மின் வேலியை நிர்மாணித்தல் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வேலி பற்றிய பிரச்சினைகள் வனசீவராசிகள் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

**1.3.2.1.5.உள்ளக கணக்காய்வுப் பிரிவு (வனசீவராசிகள் பிரிவு)**

உள்ளக கணக்காய்வுப் பிரிவு, நிதி பிரமானக் குறிப்பு 133 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள உள்ளக கணக்காய்வு நோக்கங்கள் நிறைவேறும் வகையில் தாபிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சின் நிதியியல் மற்றும் செற்பாட்டு அலுவல்கள் தொடர்பில் செயற்படும் உள்ளக நிருவாக முறைமைகளின் செயற்றிறன் மற்றும் விளைத்திறனை மதிப்பிடுவதற்காக தொடர்ந்து அது பற்றி கண்காணிக்கப்படும். அத்துடன் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்துக்கு அமைய வனசீவராசிகள் பிரிவின் உள்ளக

கணக்காய்வு அலுவல்களும் விசேட புலனாய்வு நடவடிக்கைகளும் நிறைவேற்றப்படுவதுடன் வனசீவராசிகள் பிரிவின் கீழ் வரும் வனசீவராசிகள் பாதுகாப்பு, தேசிய தாவரவியல் பூங்காக்கள் மற்றும் தேசிய வனசீவராசிகள் திணைக்களத்தின் வனசீவராசிகள் பிரிவின் விசேட ஆய்வு அலுவல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

**1.3.2.1.6. தொழில்நுட்பப் பிரிவு**

தொழில்நுட்பப் பிரிவினால், வனசீவராசிகள் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்களின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அலுவல்கள் தொடர்பில் ஒத்துழைப்பு வழங்கல், குறித்த அலுவல்களை முறையாகவும் விளைத்திறனுடையதாகவும் செயற்படுத்துவதற்காக முறையாக ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்படும்.

**2018.12.31 திகதியின்போதான மேம்பாடு**

- வில்பத்து தேசிய பூங்கா மற்றும் அதைச் சேர்ந்த வலயத்தில் ஜேர்மன் அரசாங்கத்தின் உதவியின் கீழ் செயற்படும் “வில்பத்து தேசிய பூங்கா மற்றும் அதைச் சேர்ந்த வலயத்தின் முகாமைத்துவம்” (GIZ ) கருத்திட்டத்தின் அலுவல்களை 2019.01.31ஆம் திகதிவரை நீடித்தல்.
- தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள ஹங்கல தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திப் பணிகள் மற்றும் பச்சைவீடு தொடர்பில் இணைந்த திட்டமொன்றைத் தயாரித்தல் தொடர்பான 02 பிரேரணைகள் தொடர்பில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
- உப மலைப்பிரதேச தாவரங்களை நிலைப்படுத்தி பாதுகாப்பதற்காக புதிய தரவுத் தளமொன்றை (Data Base) அமைப்பதற்குத் தேவையான தகவல் தொழில்நுட்ப அறிவை இலங்கை தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழில்நுட்ப முகவராண்மையிலிருந்து (ICTA) பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) ஊடாக பெற்றுக்கொள்வதற்கான ஒருங்கிணைப்பு அலுவல்களை மேற்கொள்ளல்.
- வனசீவராசிகள் வசிப்பிடங்களை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் மேம்பாடு பற்றி கலந்தாலோசிப்பதற்கான விசேட கூட்டமொன்றை ஒழுங்கு செய்து, தேவையான ஆலோசனைகளை வழங்கல்.
- உயிரியல் பல்லினத்தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவப்படுத்தல் கருத்திட்டத்தினால்(ESCAMP) முன்வைக்கப்பட்ட உப கருத்திட்டங்கள் (கிரிதலே மிருக வைத்தியசாலையின் புதிய நிர்மாணிப்புகள், கிரிதலே வனசீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் புனரமைப்புப் பணிகள்) தொடர்பிலான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
- காட்டு யானைகள் பாதுகாப்புக் கொள்கைகள் திருத்தம் பற்றிய பொது மக்களின் கருத்துகளைப் பெற்றுக்கொள்வதற்காக அதனை மும்மொழிகளில் தேசிய செய்திப் பத்திரிகைகளில் வெளியிடுவதற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக வன பாதுகாப்புத் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல்.

- Sri Lanka—South Africa Partnership Forum இன் கீழ் தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களத்திற்கு விலங்குகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வனசீவராசிகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள பாதுகாக்கப்படவேண்டிய தாவரங்கள் பற்றிய சட்டங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகள் வரைபொன்றை தயாரிப்பதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டு குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டு அதற்கான வரைபொன்றை தயாரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.
- வனவிலங்குகளால் ஏற்படும் விவசாய சேதங்களை தடுப்பதற்காக கமத்தொழில் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள குழுவில் கலந்துகொள்ளல்.

**1.3.2.1.7.நிலையான அபிவிருத்திப் பிரிவு**

வனசீவராசிகள் பிரிவின் நிலையான அபிவிருத்திப் பிரிவு, நிலையான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சிநிரல் அதாவது நிலையான அபிவிருத்தி நோக்கங்களை ( SDG'S) தேசிய மட்டத்தில் செயற்படுத்துவதனை ஒருங்கிணைப்பதுடன் வசதியளிக்கும் மையத்தின் தேசிய மட்டத்திலான நிறுவனம் ஆகும்.

நிலையான அபிவிருத்திப் பிரிவின் முக்கிய பணி நிலையான நோக்காகும்,அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுக்கு இடையிலான பொறிமுறை மற்றும் தரப்பினர்களின் பரந்த பங்களிப்பின் ஊடாக சுற்றாடல், சமூக மற்றும் பொருளாதார நிலைப்பாட்டினை உருதிப்படுத்துவதற்காக அபிவிருத்திச் சவால்களை நிருவகிப்பதற்கான கொள்கைகள், உபாயமுறைகள், பொறிமுறை மற்றும் நிபுணத்துவம் பற்றிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

நிலையான அபிவிருத்திப் பிரிவின் ஊடாக இலங்கையின் நிலையான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான கொள்கை ரீதியான மற்றும் நிறுவன சட்டகமொன்றையும் பொறிமுறை மற்றும் செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரிக்கும் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டது.

**2018.12.31 திகதியின் போதான மேம்பாடு**

| | |
|---|---|
| ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் | - ரூ.மில். **40.00** |
| திருத்தப்பட்ட நிதி ஏற்பாடுகள் | - ரூ.மில். **22.00** |
| செலவு | - ரூ.மில் **17.62** |

1. அமைச்சின் உபாயமுறைகளைத் தயாரித்தல்
   தேசிய அமைச்சின் உபாயமுறைகளைத் தயாரித்தல்
2. நிலையான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல்
   நிலையான அபிவிருத்தி நோக்கங்களுடன் தொடர்புடைய மாதிரி நூல்களைத் தயாரித்தல்
   நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அமைச்சின் திட்டங்களில் சேர்ப்பதற்கான செயலமர்வுகளை நடாத்தல்
3. நிலையான அபிவிருத்தி நோக்கங்களை மாகாண மட்டத்தில் செயற்படுத்தல்

**4.**நிலையான அபிவிருத்தி ஆய்வுகள் தொடர்பில் அனுசரணை வழங்கல்
**5.** தொண்டர் தேசிய மீளாய்வு
**6.** நிலையான அபிவிருத்தி நோக்கங்களை திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல் பற்றிய அனுபவங்கைள ஏனைய நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளல்.
**7.** தேசிய நிலையான அபிவிருத்தித் தகவல் கருமபீடமொன்றை தாபித்தல்.

**1.3.2.1.8. சட்டப் பிரிவு**

வனசீவராசிகள் பிரிவு மற்றும் அதன் கீழ் உள்ள திணைக்களங்கள் தொடர்பான சட்ட அலுவல்களை மேற்கொள்ளல்.

- சட்டமூலங்கள் தொடர்பிலான திருத்தங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளைத் தயாரிப்பதற்காக ஒத்துழைப்பு வழங்கல் மற்றும் அவற்றை சட்ட வரைபாக்கல் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல்.

- வனசீவராசிகள் பிரிவு மற்றும் திணைக்களம் தொடர்பில் உள்ள வழக்குகள் சம்பந்தமாக சட்ட மாதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- சட்ட மாதிபர் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆலோசனை கலந்துரையாடல்களில் கலந்துகொள்ளல் மற்றும் தேவையான அவதானிப்புகளைத் தயாரித்தளித்தல்.

# அத்தியாயம் 2

## அபிவிருத்தி நடவடிக்கைகள்

## 2. சுற்றுலா அபிவிருத்தி

### 2.1. 2020 ஆம் ஆண்டு வரையான குறிக்கோள்கள்

- சுற்றுலாத் துறையானது இலங்கையின் நிகர அன்னியச்செலாவணி ஈட்டுகையாளர் வரிசையில் 2 ஆவது இடத்தை வகிப்பதோடு, 2020 இல் சுமார் 7 பில்லியன் ஐ.அ.டொலர்களை ஈட்டும் எதிர்பார்ப்புடன் உள்ளது.

- சுற்றுலா மற்றும் அது சார்ந்த துறைகள் மூலமாக, தொழிற்படையில் 10 சதவீதமாக சுமார் 600,000 இலங்கையர்களுக்கான வேலை வாய்ப்புக்களை வழங்குதல்.

- ஒரு சுற்றுலாப் பயணியின் செலவினை நாளொன்றுக்கு 210 ஐ.அ.டொலர்களாக அதிகரித்தல்.
- சுற்றுலாப் பயணிகளை நாட்டில் நீண்டகாலம் தங்கியிருத்தலை ஊக்குவித்தால்

### 2.2. சுற்றுலாத்துறையின் செயற்றிறன் 2013 – 2018 அட்டவணை- 2.1

| விடயம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|---|
| ***சுற்றுலாப்பயணிகளின்வருகை(நபர்கள்)*** | 1,274,593 | 1527153 | 1,798,380 | 2,050,832 | 2,116,407 | 2,333,796 |
| **ஓய்வு** | 980,162 | 1,037,644 | 1,198,240 | 1,710,027 | 1,744,149 | N/A |
| **தொழில்முயற்சி** | 94,320 | 29,381 | 23,323 | 37,121 | 70,683 | N/A |
| **வேறு** | 200,111 | 460,128 | 576,817 | 303,684 | 301,575 | N/A |
| ***சுற்றுலா விருந்துபசார இராத்திரி* ('000)** | 10,961 | 15,119 | 18,163 | 20,918 | 23,068 | 25,205 |
| ***அறை பயன்பாடு* (%)** | 71.7 | 74.3 | 74.5 | 74.76 | 73.27 | N/A |
| | | | | | | |
| ***விருந்துபசார சுற்றுலா பெறுகை* (ரூ.மில்)** | 221,720 | 317,502 | 405,492 | 512,594 | 598,356 | 712,027 |
| **தொழில்கள்** | 270,150 | 299,890 | 319,436 | 335,659 | 359,215 | 388,487 |
| **நேரடித் தொழில்கள்** | 112,550 | 129,790 | 135,930 | 146,115 | 156,369 | 169,003 |
| ***மதிப்பிடப்பட்டுள்ள மறைமுக தொழில்கள்*** | 157,600 | 170,100 | 183,506 | 189,544 | 202,846 | 219,484 |
| **** - மதிப்பிடப்பட்ட பெறுமதி** | | | | | | |

*மூலம்:* இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

**2.3. பிரசித்தி மிக்க முதல் 10 சந்தை மூலங்கள் (நாடுகள்)** **அட்டவணை- 2.2**

| நாடுகள் | 2017 | 2018 | % |
|---|---|---|---|
| இந்தியா | 384,628 | 424,887 | 10% |
| ஐக்கிய இராச்சியம் | 201,879 | 254,176 | 26% |
| சீனா | 268,952 | 265,965 | -1% |
| ஜேர்மனி | 130,227 | 156,888 | 20% |
| அவுஸ்திரேலியா | 81,281 | 110,928 | 36% |
| ரஷ்யா | 59,191 | 64,497 | 9% |
| பிரான்ஸ் | 97,282 | 106,449 | 9% |
| அமெரிக்கா | 57,479 | 75,308 | 31% |
| சுவீடன் | 24,275 | 28,267 | 16% |
| சவுதி அரேபியா | 35,481 | 34,703 | -2% |
| சுற்றுலா பயணிகளின் வருகை | **2,116,407** | **2,333,796** | **10.3%** |

*மூலம்:* இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

**2.4.அந்நியச் செலாவணி ஈட்டுகையாளர் என்ற வகையில் சுற்றுலா வருமான வளர்ச்சி (ஐ.அ.டொலர் மில்லியன்)** **வரைபு - 2.1**




*மூலம்:* இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

## 2.5 அபிவிருத்தி செயற்திட்டம்

ஒரு சுற்றுலா இலக்கு நாடு என்ற வகையில் இலங்கையின் பாரிய வலிமையானது, அதன் இயற்கை வளச் சொத்துக்களின் அதிவிசேட பல்வகைமை, புராதன மற்றும் நவீன காலத்துக் கலாசாரம், செழிப்பு மிக்க வரலாறு மற்றும் நட்பு நேயம் கொண்ட மக்கள் போன்ற அம்சங்களுக்கு மத்தியில் பரந்து விரிந்து காணப்படுகின்றது.

இலங்கையானது ஒருங்கிணைந்த சுற்றுலா இலக்குகளைப் பேணிப் பாதுகாத்து, அவற்றை அபிவிருத்தி செய்து மற்றும் அவற்றை அமுல்படுத்துவதன் ஊடாக ஒரு நீடித்து நிகைக்கத்தகு சுற்றுலா இலக்குகளை வினைத்திறக் மிக்க முறையில் கட்டி எழுப்பக் கூடியதொரு சுற்றுலா திட்டமிடல் வேலைச்சட்டகம் மற்றும் அணுகுமுறை ஆகியவற்றைத் தாபிப்பதனை முன்னோக்கிய செயலாக்கத்தினை மேற்கொண்டு வருகிறது. விசேடமாக சுற்றுலா பற்றிய திட்டமிடல் ஒரு இன்றியமையாத அம்சமாகும். எனவே, வளங்கள் பாரியளவு அனுகூலங்களைத் தருமிடத்து அவை அனைத்து மட்டங்களிலுமுள்ள அரசாங்க முகவர்களுக்குமாக (தேசிய, பிராந்திய, உள்நாட்டு மற்றும் மாநகரம்) திசைப்படுத்தப்பட முடியும்.

2018 வரவுசெலவுத் திட்டத்தின் பிரகாரம், சுற்றுலாத் துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சானது ஏழு சுற்றுலா அபிவிருத்தி சார்ந்த முன்னெடுப்புகளுக்கென ரூபா. 845 மில்லியன் தொகையினை ஒதுக்கியுள்ளது.

அத்தகைய கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

**அபிவிருத்திக் கருத்திட்டங்கள் - 2018** **அட்டவணை: 2.3**

| இல. | அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | ஒதுக்கீடு (ரூ.மில்.) | திருத்தப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மில்) | செலவினம் (ரூ.மில்.) |
|---|---|---|---|---|
| | **வரவுசெலவுத் திட்ட ஏற்பாடுகள்** | | | |
| 01 | உல்லாசப் பயணிகளைக் கவரும் அம்சங்களுக்களை அபிவிருத்தி செய்தல் | 375.00 | 390.00* | 256.83 |
| 02 | சுற்றுலா பற்றிய மனித மூலதனத்தினை அபிவிருத்தி செய்தல் | 40.00 | 40.00 | 31.65 |
| 03 | சமூக சுற்றுலா அபிவிருத்தி (சுற்றுலாக் கிராமங்களின் அபிவிருத்தி) | 25.00 | 10.00 | 2.19 |
| 04 | சுற்றுலாவுக்கான முக்கய பிரதேசங்களில் சுற்றுாப் பொலிஸ் பிரிவுகளை விரிவாக்கம் செய்தல் | 30.00 | 30.00 | 0.012 |
| | உப மொத்தம் | 470.00 | 470.00 | 290.67 |
| | **விசேட வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகள்** | | | |
| 05 | சுற்றுலா நேயம் கொண்ட ''ருக் ருக'' நிகழ்ச்சித்திட்டம் | 50.00 | 50.00 | 1.11* |
| 06 | 6 கோட்டைகளை அபிவிருத்தி செய்தல் | 250.00 | 250.00 | 3.77 |
| 07 | புகையிரத நிலையங்களை தரமுயர்த்தி அவற்றை தொல்லியல் பிரதேசங்களாக பிரகடனம் செய்தல் | 75.00 | 75.00 | 35.538 |
| | உப மொத்தம் | 375.00 | 375.00 | 40.418 |
| | **முழு மொத்தம்** | **845.00** | **845.00** | **331.088** |

*மூலம்:* சுற்றுலா அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு

### 2.5.1 சுற்றுலாக் கவர்ச்சி அம்சங்களை அபிவிருத்தி செய்தல்

இந்த அமைச்சானது ஒன்றுடனொன்று உள்ளிணைப்புடையதும் பூரணத்துவம் கொண்டதுமான பிராந்திய மற்றும் உள்நாட்டு சுற்றுலா இலக்குகளைக் கொண்டு வெற்றிகரமானதும் நீடுறுதி மிக்கதுமான சுற்றுலாத் துறைக்கான சுற்றுலா வசதிகளை மேம்படுத்துவதற்கான பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளது. இத்தகைய சுற்றுலா இலக்குகள், காலப் போக்கில் அவற்றுக்கான தனித்துவம் வாய்ந்த விற்பனை எண்ணக்கருக்களை வரையறை செய்துள்ளன. மேலும் இவை, தமது கேள்வி மற்றும் விநியோக இயக்கத்திற்கு அமைவான கவர்ச்சி மிக்க அம்சங்கள், வசதிகள், அணுகல் வசதிகள், மனித வளங்கள், புகழ் மற்றும் பெறுமதிகள் போன்றவற்றையும் உள்ளடக்கியுள்ளன.

இத்தகைய சூழமைவுகளினுள், சுற்றுலாத் துறை சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை அனைத்து மாகாணங்களிலும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் 2018 வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் ரூபா. 390 மில்லியன் தொகையானது ஒதுக்கப்பட்டுள்ளது.

### கருத்திட்டத்தின் குறிக்கோள்கள்:

- கிராமியப் பிரதேசங்களில் சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மைய அவதானத்தினைச் செலுத்தி சுற்றுலாத் துறையில் நீடுறுதிமிக்க வளர்ச்சியை உறுதிப்படுத்தல்.
- கிராமியச் சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் கிராமிய சுற்றுலா அபிவிருத்தி உபாய முறையினை ஒருங்கிணைத்தல்.
- நேரடியான மற்றும் நேரடியற்ற தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி சிறிய தொழில்முயற்சியாளர்களுக்கான மற்று் சமுதாய இயக்குனர்களுக்கான வருமானப் பாதைகளை அதிகரித்தல்.
- உல்லாசப் பயணி வருகையினை அதிகரித்து உள்நாட்டுப் பொருளாதாரச் சூழமைவினுள் அவர்கள் பணத்தினைச் செலவு செய்வதற்கான வசதியை வழங்குதல்.
- பல்வேறுபட்ட கலாசாரங்கள் மற்றும் அவர்களது பாரம்பரியங்களை உணர்ந்து அவற்றை ஊக்குவித்தல்.

**சுற்றலாக் கவர்ச்சிக் கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்தல்**

இந்த அமைச்சானது இனங்காணப்பட்ட சுற்றுலா உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதில் மாகாண சபைகள், மாவட்டச் செயலகங்கள், மற்றும் அரச முகவர்களுடன் இணைந்து பணியாற்றி வருகின்றது.

31.12.2018 ல் உள்ளவரன விபரங்கள் பின்வருமாறு: அட்டவணை 2.4

| இல | கருத்திட்டச் செயற்பாடுகளின் பெயர் | ஒதுக்கங்கள் (ரூ.மில்.) | செலவினம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் | அமுல்படுத்தும் முகவர் |
|---|---|---|---|---|---|
| | **அனுராதபுரம் மாவட்டம்** | | | | |
| 1 | நுவரவெவ குளக் கட்டுக்கான நடை பாதை நிர்மாணம் | 2.80 | 2.80 | நிறைவு | பிரதம செயலாளர்,வட மத்திய மாகாணம் |
| 2 | இசுறுமுனிய விகாரைக்கு அருகாமையில் துப்பரவேற்பாட்டு வசதி முறைமை | 10.28 | 10.28 | நிறைவு | பிரதம செயலாளர்,வட மத்திய மாகாணம் |
| 3 | அனுராதபுரம் வாகனத் தரிப்பிடத்திற்கு அருகில் குட்டம் பொகுண மற்றும் சமாதிப்பிளிம ஆகியவற்றுக்கு இடையில் துப்பரவேற்பாட்டு வசதி முறைமை | 7.03 | 7.03 | நிறைவு | பிரதம செயலாளர்,வட மத்திய மாகாணம் |
| | **உப மொத்தம்** | **20.11** | **20.11** | | |
| | **பொலன்னறுவை மாவட்டம்** | | | | |
| 4 | பொலன்னறுவை – வட்டடகெயவிற்கு அருகில் குளம் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களை ஒரு சுற்றுலா இலக்காக மேம்படுத்தல். | 13.43 | 13.43 | நிறைவு | பிரதம செயலாளர்,வட மத்திய மாகாணம் |
| | **உப மொத்தம்** | **13.43** | **13.43** | | |
| | **புத்தளம் மாவட்டம்** | | | | |
| 5 | புத்தளம் - ஆராய்ச்சிக்கட்டுவ பிரதேசத்தில் ஓய்வெடுக்கும் இடங்களைச் சூழ வேலி அமைத்தல். | 5.67 | 5.65 | நிறைவு | மாவட்டச் செயலாளர் புத்தளம் |
| 6 | அங்கப்பிட்டிய சந்தியில் இருந்து அளுத்தொட்ட சந்தி வரை வீதியை நிர்மானித்தல். | 0.77 | 0.599 | நிறைவு | மாவட்டச் செயலாளர் புத்தளம் |
| 7 | கம்மாள பாலம் முதல் கடற்கரை வரையான வீதியை அபிவிருத்தி செய்தல் | 1.55 | 1.25 | நிறைவு | மாவட்டச் செயலாளர் புத்தளம் |
| 8 | மணவெரியவிலுள்ள ஓய்வகத்திற்கு அருகில் வாகனத் தரிப்பிடம் மற்றும் வீதி அபிவிருத்தி | 5.52 | 4.63 | நிறைவு | மாவட்டச் செயலாளர் புத்தளம் |
| 9 | புத்தளம் வைக்கல பிரதேசத்திற்கு ஒரு மின் நிலைமாற்றி விநியோகம் | 4.58 | 4.58 | இடம்பெற்று வருகிறது | இலங்கை மின்சார சபை |
| 10 | புத்தளத்தில் கடற்கரைப் பூங்கா ஒன்றினை அபிவிருத்தி செய்தல் | 9.14 | 8.66 | நிறைவு | மாவட்டச் செயலாளர் புத்தளம் |
| 11 | இரணவில கடற்கரைப் பிரதேசத்தினை அபிவிருத்தி செய்தல் | 0.06 | 0.06 | நிறைவு | மாவட்டச் செயலாளர் புத்தளம் |
| 12 | கல்பிட்டி துரையடி வீதியை அபிவிருத்தி செய்தல் | 33.52 | 11.40 | இடம்பெற்று 52% | மாவட்டச் செயலாளர் புத்தளம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **உப மொத்தம்** | **60.81** | **36.83** | | |
| | **கண்டி மாவட்டம்** | | | | |
| **13** | கடலதெனிய ரஜ மகா விகாரையினுள்ளும் அதனைச் சூழவும் பெரஹர வீதியை அபிவிருத்தி செய்தல் | 15.43 | 15.43 | நிறைவு | பிரதம செயலாளர் மத்திய மாகாணம் |
| **14** | நெல்லிக்கல சர்வதேச பௌத்த நிலையத்தில் மலசல கூடத் தொகுதிகளை நிர்மாணித்தல். | 2.50 | 0.79 | இடம்பெற்று வருகிறது (40%) | பிரதம செயலாளர் மத்திய மாகாணம் |
| **15** | கடலதெனிய விகாரைக்கு அருகிலுள்ள சுற்றுலாக் கவர்ச்சி அம்சங்களை அதிகரித்தல் மற்றும் அது சம்பந்தமான பௌதீக உட்கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்தல். கட்டம் iii – கண்டி | 7.06 | 7.06 | நிறைவு | பிரதம செயலாளர் மத்திய மாகாணம் |
| | **உப மொத்தம்** | **24.99** | **23.28** | | |
| | **கேகாலை மாவட்டம்** | | | | |
| **16** | பதலகல கற்பாறைப் பிரதேசத்துடன் சம்பந்தப்பட்ட சுற்றுலா வசதிகளை அபிவிருத்தி செய்தல் | 2.70 | 2.63 | நிறைவு | பிரதம செயலாளர் |
| **17** | ருவன்வெலவில் பெதங்கொட அடர்ந்த மூங்கில் புதர்களுக்கான அணுகல் பாதையினை அபிவிருத்தி செய்தல். | 7.96 | 1.75 | நிறைவு | மாவட்டச் செயலாளர் கேகாலை |
| | **உப மொத்தம்** | **10.66** | **4.38** | | |
| | **நுவரெலிய மாவட்டம்** | | | | |
| **18** | ஹட்டன் புகையிரத நிலைய அபிவிருத்தி – சுற்றுலாவுக்கான வசதி ஏற்பாடு | 3.59 | 0.50 | நிறைவு | பிரதம செயலாளர் |
| **19** | சுற்றுலாக் கவர்ச்சி மிக்க இடமாக கிரகரி ஏரியினை அபிவிருத்தி செய்தல். கட்டம் - iv - நுவரெலிய | 38.18 | 38.18 | நிறைவு | பிரதம செயலாளர் |
| **20** | கொத்மல மகாவெலி மகா செய சுற்றுலா வசதிகளை அபிவிருத்தி செய்தல் - நுவரெலிய | 43.40 | 10.50 | இடம்பெற்று வருகிறது | பிரதம செயலாளர் |
| **21** | ஹட்டன் புகையிரத நிலையத்தில் சுற்றுலா வசதி மையத்திற்கான உபகரணங்களின் கொள்வனவு | 0.17 | 0.17 | இடம்பெற்று வருகிறது | பிரதம செயலாளர் |
| | **உப மொத்தம்** | **85.34** | **49.35** | | |
| | **குருணாகலை மாவட்டம்** | | | | |
| **22** | ஒரு சுற்றுலாக் கவர்ச்சி மிக்க பிரதேசமாக யாப்பகூவ ரஜ மகா விகாரையை அபிவிருத்தி செய்தல் | 10.64 | 10.64 | நிறைவு | மாவட்டச் செயலாளர் |
| **23** | சுற்றுலாக் கவர்ச்சி மிக்கதொரு இடமாக ரிட்டி விகாரையை அபிவிருத்தி செய்தல் | 9.11 | 9.11 | நிறைவு | மாவட்டச் செயலாளர் |
| **24** | அரங்கல தியான நிலையத்திற்கு அருகிலுள்ள பிரதேசத்திற்கான உட்கட்டமைப்பு வசதியை அபிவிருத்தி செய்தல் | 5.99 | 5.99 | நிறைவு | மாவட்டச் செயலாளர் |
| **25** | பண்டுவஸ்நுவரவிலுள்ள தொல்பொருளியல் பிரதேசங்களுக்கான பெயர்ப் பலகைகளை நிறுவுதல் | 1.48 | 1.48 | நிறைவு | மாவட்டச் செயலாளர் |
| **26** | ரம்படாகல்ல மொணராகல கோவிலில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் | 16.51 | 11.14 | நிறைவு | மாவட்டச் செயலாளர் |
| **27** | கட்டிமகானவிலுள்ள புனித அனா ஆலயத்தில் ஓய்வகத்தின நிர்மாணித்தல் | 21.72 | 6.28 | இடம்பெற்று வருகிறது 70% | மாவட்டச் செயலாளர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **28** | பதனிய நகரில் ஓய்வகத்தினை நிர்மாணத்தில் | 3.12 | 0.63 | நிறைவு | மாவட்டச் செயலாளர் |
| | **உப மொத்தம்** | **68.57** | **45.27** | | |
